2. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபம் மற்றும் தாழ்வாரங்களில் செல்லுலார் ஃபோன் மற்றும் பேஜர் பயன்படுத்தத் தடை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடுகள்) நான் அறிவிப்பை முடித்துவிடுகிறேன்.*

பாராளுமன்ற நடைமுறைகளைப் பின்பற்றி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபம் மற்றும் அதனையொட்டி இருக்கிற தாழ்வாரங்களில், செல்லுலார் ஃபோன் மற்றும் பேஜர் ஆகிய கருவிகளைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது என்றும், இதுகுறித்து உறுப்பினர்கள் தங்களுடைய பூரண ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்றும் 24-1-2003-ஆம் நாளிட்ட செய்தித்தாள் மூலம் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், மேற்கூறிய கருவிகளைப் பேரவை வளாகத்தில் சில உறுப்பினர்கள் தொடர்ந்து பயன்படுத்தி வருவதாகத் தெரிகிறது. எனவே, மேற்கூறிய செய்தித்தாளில் தெரிவிக்கப்பட்டதை உறுப்பினர்களுக்கு மீண்டும் நினைவூட்டி, பேரவை மண்டபம் மற்றும் அதனையொட்டிய தாழ்வாரங்களில், செல்லுலார் ஃபோன் மற்றும் பேஜர் ஆகிய கருவிகளைப் பயன்படுத்துவதை—அதேபோல், சட்டமன்றத்திற்கு வரக்கூடிய பத்திரிகையாளர்களும், செல்ஃபோன்களைப் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. அதனைத் தவிர்க்க வேண்டுமென்று பத்திரிகையாளர்களையும், உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறேன். சட்டசபைக்கு உள்ளே வருகிறபோது, கொஞ்சம் செல்ஃபோனை, செல்லாத ஃபோனாக ஆக்கிவிடுங்கள்! (சிரிப்பு)

திரு. பரிதி இளம்வழுதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)*

3. தகவல் கோரல்

(அ) 28-1-2003-ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகளை நீக்கியது

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன துரைமுருகன்? என்ன? சொல்லுங்கள்.*